## JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU
## CC No.231 / 2026

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : Lw1/Pw1 |
| Name | : Iyyappan |
| Father/Husband's Name | : Subramanian |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 12.03.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது துணை உதவி ஆய்வாளராக தாம்பரம் ரயில்வே பாதுகாப்பு பிரிவில் பணியாற்றி வருகிறேன். கடந்த 10.01.2026 அன்று நான், தாம்பரம் ரயில்வே பாதுகாப்பு பிரிவில் உதவி ஆய்வாளராக பணியிலிருந்தபோது, சுடலை துணை காவல் உதவி ஆய்வாளர், கார்த்திக், துணை காவல் உதவி ஆய்வாளர் , சத்யகுமார் தலைமை காவலர், விஜயகுமார் தலைமை காவலர் ஆகியோர்களுடன்

காட்டானகுளத்தூர் ரயில் நிலையத்தில் ரயில்வே பொருட்கள் திருடுபோனது சம்பந்தமாக ரகசிய கண்காணிப்பு இருந்த சமயத்தில் பின்னால் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த கார்த்திக் த.பெ. சுப்பிரமணி, என்பவர் தனது இடது கையில் ஒரு மஞ்சள் மற்றும் பச்சை நிற பாலீத்தீன் பையை எடுத்து கொண்டு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி எடுத்து கொண்டிருந்தவரை தடுத்து நிறுத்தி விசாரணை செய்த போது, முன்னுக்கு பின் முரணாக கூறியவரை, தனிநபர் சாட்சிகள் இல்லாததால், என்னுடன் வந்த காவலர்கள் முன்னிலையில் மேற்கண்ட நபர் வைத்திருந்த பையை சோதனை செய்து பார்த்தபோது, அதில் ரயில்வேக்கு சொந்தமான எறிந்த நிலையில் அரை கிலோ காப்பர் ஒயர் இருந்தது. அதை கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து, மேற்சொன்ன காவலர்கள் முன்னிலையில் கைப்பற்றினேன். நான் மற்றும் சக காவலர்கள் சாட்சியாக கையொப்பமிட்டோம். அந்த கைப்பற்றுதல் மகசர் **அதசா.ஆ1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி அதே சாட்சிகள் முன்னிலையில் எதிரி எவ்வித அச்சுறுத்தலும், தூண்டுதலுமின்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு 2 பார்வை மகசர் மேற்சொன்ன சாட்சிகள் முன்னிலையில் தயார் செய்து, அவர்களிடம் கையொப்பம் பெற்றார். அந்த இரண்டு பார்வை மகசர் முறையே **அதசா.ஆ2 மற்றும் அதசா.ஆ3 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அதை வீடியோ பதிவும் செய்தேன்.

பின்னர் வழக்கு சொத்துகள் மற்றும் எதிரிகளுடன் நிலையம் சேர்ந்து உரிய பாராவசம் ஒப்படைத்து நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். பின்னர் எதிரியின் மீது குற்ற எண். 2/2026 பிரிவுகள் 3(a)RP(up) act 1966 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அதசா.ஆ4 ஆக** குறியீடு செய்யப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட பொருளை படிவம் 95 முலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். அந்த படிவம் 95 **அதசா.ஆ5 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. அரை கிலோ காப்பர் ஒயர் **சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தின் மதிப்பு குறித்து, SSE யிடம் சான்று பெற்றேன். அந்த சான்று **அதசா.ஆ6 ஆக** குறியீடு செய்யப்படுகிறது. ரயில்வே சொத்து களவு போனதாக பெற்றப்பட்ட சான்று **அதசா.ஆ7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பிறகு புலன் விசாரணையை முடித்து எதிரிகளின் மீது 3(a)RP(up) act 1966 ன் படி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

எந்த தேதியில் நானும், எனது உடனிருந்த காவலர்களும் ரோந்து பணியில் இருந்தோம் என்றால் 10.01.2026 தேதி ஆகும். நாங்கள் ரோந்து பணியில் இருந்ததற்கு வாய்மொழி உத்தரவோ அல்லது எழுத்து முல உத்தரவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எந்த தேதியில் எந்த நிலையில் நான் எதிரியை பார்த்தேன் என்றால் 10.01.2026ம் தேதி சந்தேகப்படும் நிலையில் எதிரி இருந்ததால், அவரை விசாரித்தேன். எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்தேன் என்றால் காலை 5.15 மணிக்கு கைது செய்தேன். கைது ஆவணங்களை எங்கு வைத்து தயார் செய்தேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன். அந்த சமயத்தில் வெளிச்சம் இல்லாத காரணத்தினால் ஆவணங்களை காவல்நிலையத்தில் வைத்து தான் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. கைப்பற்றுதல் மகசர் மற்றும் அதில் சாட்சிகளிடம் கையெழுத்து காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்தேன் என்றால் சரியல்ல. தாம்பரத்திலிருந்து

சம்பவ இடம் எவ்வளவு தூரம் என்றால் 17 கி.மீட்டர் இருக்கும். இது ரயில்வேக்கு சொந்தமான பொருள் என்பதற்கு எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் எந்த அடையாளமும் இல்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கில் கைப்பற்றப்பட்ட எறிந்த நிலையில் உள்ள ஓயர் ரயில்வேக்கு சொந்தமானது என்பது குறித்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கைப்பற்றப்பட்ட பொருளை நிபுணரிடம் அனுப்பி சோதிக்கப்பட்டதா என்றால் இல்லை. இது சம்பந்தமாக எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் தரவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு இலவசமாக சிடி மற்றும் வீடியோ பதிவை கொடுக்கவில்லை என்றால் சரிதான். பொது நாட்குறிப்பு மற்றும் மற்ற ஆவணங்களையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் தனிநபர் சாட்சிகள் யாருமில்லை என்றால் சரிதான். சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், ஒப்புதல் வாக்குமூலம் தயார் செய்யபடவில்லை என்றாலும், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்யவில்லை என்றாலும், கைப்பற்றப்பட்ட பொருள் கைப்பற்றபடவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல்நிலையத்தில் வைத்து வழக்கிற்காக பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமுமில்லை என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/- S.Sahaana
Judicial Magistrate No.II,
Chengalpattu.